# பழந்தமிழரின் போர்க்காலப் பணிக்குழு

14

**முனைவர் வி. அன்னபாக்கியம்,**
**தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,**
**தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி(தன்னாட்சி),**
**சிவகாசி - 626 123.**
Mail Id : ritchia08@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

போர் என்பது இவ்வுலகத்திற்குப் புதியது கிடையாது. உலகில் எங்கோ ஒரு மூலையில் எல்லாக் காலங்களிலும் நடைபெற்று கொண்டுதான் இருந்திருக்கின்றது. தனக்குரிய பொருளைப் பிறர் பறிக்க நினைக்கும் பொழுது போர் தோன்றி இருக்கலாம். இயற்கையாகவே வலிமை உடைய ஒருவன், வலிமை குறைந்த மற்றொருவனை அடக்கி ஆள நினைத்தபொழுதும் போர் தொடங்கி இருக்கலாம்.

தொல்காப்பியர் கால அரசியலுக்கு வீரமே அடிப்படையாக இருந்ததால் வீரர்கள் போரின் போது போருக்குரிய நெறிமுறைகளைப் பின்பற்றி உள்ளனர். போர் பற்றிய பல்வேறு படிநிலைகளை, வளர்ச்சியைப் பற்றிப் பேசும் தொல்காப்பியர், 'போர்' என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. தொல்காப்பியர் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்ற நால்வகை போர்களைப் பற்றிப் பேசியுள்ளார். இப்போர்கள் அனைத்தும் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஏற்றவாறு அமைந்த தனித்தனிப் போர்களாகும்.

புறநானூறு ஏழு வகையான போர்களை விளக்குகின்றது. இவை போரின் பல்வேறு படிநிலைகளாக விளங்குகின்றன. இப்போரின் போது பழந்தமிழர்கள் பயன்படுத்திய போர்க்காலப் பணிக்குழுக்களின் செயல்பாடுகளைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள் – பழந்தமிழ் இலக்கியங்கள், ஐம்பெருங்குழு, எண்பேராயம்**

**முன்னுரை**

உலகம் தோன்றிய காலந்தொட்டு மனிதன் இயற்கையோடும் விலங்குகளோடும் நோய்களோடும் போராடி போராடித் தன் வாழ்க்கையை அங்கிகரிக்க முனைந்தான். தன்னையும் தன் இனத்தையும் காக்க வேண்டிய நிலையில் இப்போராட்டம் துவங்கியுள்ளது. இப்போராட்டத்தின் வளர்ச்சியே பழந்தமிழர்களின் நெறிப்படுத்தப்பட்ட போர்முறையாகும். இப்போரின் போது மன்னர்கள் சிறந்த மரபுகளைப் பின்பற்றினர். அறிவில் சிறந்தவர்கள் நிறைந்த ஐம்பெருங்குழு, எண்பேராயத்தில் ஆலோசனைகள் பெற்றே மன்னர்கள் போரில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் போர்க்காலப் பணிக்குழுவினரின் செயல்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**போர்க்காலப் பணிக்குழு**

சங்க காலத்தில் குடிபழி தூற்றாத செங்கோலனாக ஆட்சி செய்ய வேண்டுமென்ற கவலை மன்னர்களுக்கு இருந்திருக்கின்றன. நாட்டின் காவல் தொழிலில் மன்னனுக்குத் துணையாக மந்திரிச் சுற்றம் இருந்தமைக்குக் குறிப்புகள் உள்ளன.

“ பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்
நாஅல் வேத நெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி ” (புறம்.2:17-19)

என்ற புறநானூற்றுப் பகுதி அமைச்சர்கள் மன்னனுக்கு உறுதிச் சுற்றமாய் விளங்கிய செய்தியைக் காட்டுகின்றது. மதுரைக்காஞ்சியில் அமைச்சர், காவிதி மாக்கள் என்று சுட்டப்படுகின்றனர்.

“ மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடக்கி
அன்பும் அறனும் ஒழியாது காத்து
பழிஒரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்கள் ” (மதுரைக். 495-499)

என காவிதி மாக்களாகிய அமைச்சரைக் கூறிய பின்னர் அவரொழிந்த ஏனை நால்வரை ‘தாமேஎந் தோன்றிய நாற்பெருங் குழு’ (மதுரைக்.510) எனக் குறிக்கின்றது. மன்னனுக்கு ஆட்சியில் உதவி புரிய **ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயம்** ஆகிய இரண்டு அமைப்புகள் இருந்தன என சிலப்பதிகாரம் கூறுகின்றது.

“ ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்
வெம்பரி யானை வேந்தர்க் கோங்கிய
கரும வினைஞருங் கணக்கியல் வினைஞரும்
தரும வினைஞருந் தந்திர வினைஞரும் ” (சிலம்பு. 26:38-41)

என மன்னனைச் சூழ்ந்து குழுவினர் பலரும் வினைஞர் பலரும் செல்வதாக அடிகள் குறிப்பிட்டுள்ளார்.

**ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயத்தில் இடம்பெறுபவர்களின் விபரம்**

ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயம் ஆகிய அமைப்புகள் சங்க காலத்தில் இருந்திருக்கும். ஆனால் இக்குழுவில் இருந்தோர் பற்றியும் அவர்களின் பணிகள் குறித்தும் அக்கால இலக்கியங்களிலிருந்து எச்செய்தியும் அறிய இயலவில்லை.

ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயத்தில் இடம்பெறுபவர்களைப் பற்றி அடியார்க்கு நல்லார் கூறுகையில்,

“ஐம்பெருங்குழுவான அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தாவாத் தொழில் தூதுவர், சாரணரென்;றிவர், பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப்படுமே எனுமிவர். இவ்ஐந்து கூட்டமே பஞ்சாயம் எனப்படும். எண்பேராயமாவன: கரணத்தியலவர், கருமகாரர், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், நளிபடைத்தலைவர், யானைவீரர், இவுளி மறவர் இனைய ரெண்பே ராயமென்ப எனுமிவர்” [1] என்று விளக்கம் அளித்துள்ளார்.

ஐம்பெருங்குழுவில், “மாசனம், புரோகிதர், மருத்துவர், கணியர், அமைச்சர் என்னும் ஐவர் ” [2] இடம் பெறுவதாக அரும்பத உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயத்தில் இடம்பெறுபவர்களைப் பற்றி அறிஞர் அ.கி. பரந்தாமனார் கூறுகையில், “அமைச்சர் (Chief Minister), புரோகிதர் (Priest), சேனாபதியர்

(Commander-in Cheaf), தூதுவர் (Ambassdor), சாரணர் (Ingelligence Officer), ஆகியவர் அடங்கிய குழுவே ஐம்பெருங்குழுவாகும். எண்பேராயத்தில் கரணத்தியலவர் (Cheaf Executive Officer), கருமவீரர்கள் (Priests), கனகச்சுற்றம் (Treasury Officials), கடைகாப்பாளர் (Guards), நகர மாந்தர் (Great men of the city), படைத்தலைவர் (Captains of Troops), யானைவீரர் (Elephant warriors), இவுளி மறவர் (Cavalry - Officers) ஆகிய இவர்கள் இடம்பெற்றிருந்தார்கள் " [3] என்று விளக்கம் அளித்துள்ளார்.

இவ்வாறாக இக்குழுவில் இடம்பெறுபவர்களைப் பற்றி அறிஞர் பெருமக்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. என்றாலும் இக்குழுவில் உள்ளவர்களே மன்னனுக்கு ஆலோசனைகள் பல தந்து நெறிப்படுத்துவதில், நல்வழிப் படுத்துவதில் பெரும்பங்கு வகித்துள்ளனர். நாட்டின் முக்கிய செயல்களில் அரசற்கு அடுத்து ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் சிறப்பிடம் பெற்றிருந்தமை இதன் வழி நன்கு புலனாகும்.

**ஐம்பெருங்குழு**

ஐம்பெருங்குழு நாட்டின் உயர்ந்த குழுவாகும். போர்க்காலங்களில் போர்க்கொள்கைகளை உருவாக்குவதிலும் மற்ற நேரங்களில் நாட்டிற்கான சட்டதிட்டங்களைத் தீட்டுவதிலும் இக்குழுவினரின் பங்கு அளவிடற்கரியன.

**அமைச்சர்**

ஐம்பெருங்குழுவில் அமைச்சர் முதலிடம் பெறுகிறார். அமைச்சரையும் படைத்தலைவரையும் மலைபடுகடாம் 'நீங்காச் சுற்றம்' (376) எனக் கூறுகின்றது. அமைச்சர் என்பது நாட்டின் இன்றியமையாத உறுப்பினர் ஆவார்.

அமைச்சருக்குரிய இலக்கணம், அமைச்சரின் பல்வேறு பண்புகள் மற்றும் பணிகள் பற்றி வள்ளுவர் 64, 65, 66 ஆகிய மூன்று அதிகாரங்களில் பேசியுள்ளார்.

"வருமுன் காக்கும் திறமையும் வேற்று மன்னர் நிலை அறியும் அறிவாற்றலும் உடையவர். வீறுசால் பேரமைச்சர்" [4] , "அரசிற்கு ஆலம்வீழ் போன்றவர்" [5] என திரிகடுகம் அமைச்சரின் பண்புகளையும் ஆற்றல்களையும் விளக்கியுள்ளது.

அறிஞர்களால் கோப்பெருஞ்சோழனின் அமைச்சராக எண்ணப்படும் பொத்தியார் அவ்வரசனோடு உடனுயிர் நீக்குமளவுக்கு நெருங்கிய நட்புடையவராக இருந்தமையைப் புறநானூற்றுப் பாடல்கள் (220, 221, 222, 223) உணர்த்துகின்றன. இவை தவிர அமைச்சர்களைப் பற்றிய செய்திகள் எதுவும் புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெறவில்லை.

ஆனால் அமைச்சர்கள் நாட்டின் அமைதி மற்றும் போர்க்காலங்களில் அரசுக்கு உறுதுணையாக இருந்ததோடு தேவைப்படும் நேரங்களிலெல்லாம் அறிவுரையும் ஆலோசனையும் வழங்கி இருக்க வேண்டும்.

**புரோகிதர்**

புரோகிதர் எனும் சொல் ஆசான், புலவர், பெரியோர் ஆகியோரைக் குறிக்கும். வள்ளுவர் குறிப்பிட்டுள்ள பெரியாரைத் துணைக்கோடல் எனும் அதிகார முன்னுரையில் பரிமேலழகர்,

“பேரறிவுடையராவார் அரசர்க்கும் அங்கங்கட்கும் மானுடத் தெய்வக் குற்றங்கள் வராமல் காத்தற்கு உரிய அமைச்சர் புரோகிதர்” [6] என்ற இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

நாம் எச்செயலைச் செய்வதற்கும் பெரியோர்களின் ஆலோசனையைக் கேட்பது இயற்கை. அவ்வாறு கேட்டு நடப்பதால் வெற்றி கிடைப்பது திண்ணம். அதுபோல மன்னனும் தான் எச்செயலைச் செய்தாலும் தன்னோடு இருக்கும் பெரியோர்களின் சொற்கேட்டு நடப்பதோடு அவற்றை ஆராய்ந்து செய்ய வேண்டும். பெரியாரைப் பேணாது ஒழுகின் துன்பம் வரும்.

பண்டைய மன்னர்களைச் செங்கோல் நெறி பிறழாமல் நிலைநிறுத்தியதில் அமைச்சர்களை விட புலவர்களே பெரும் தொண்டாற்றியுள்ளனர். மன்னர்கள் தவறு செய்த போது அவன் மீது உரிமை மிக்கவர்களாய் இடித்துரைத்த புலவர்களின் அஞ்சாத வாய்மையுரை (புறம்.2, 3, 5, 6, 10, 35, 40, 55, 184) மன்னர்களின் செங்கோன்மைக்கு துணையாய் இருந்திருக்கின்றது. இப்பொருள் அமைந்த பாடல்கள் அனைத்தும் புறநானூற்றில் செவியறிவுறூஉ என்னும் துறையாக அமைந்துள்ளது.

மேலும் நீ சோழன் மகன் அல்லன் என வெகுண்டு உரைத்த போதும்(43) கோட்டையை அடைத்து உள்ளொடுங்கிக் கிடத்தல் நாணத்தக்கது என்று கூறிய போதும்(44) முரசுக் கட்டிலில் உறங்கிய போதும்(50) இரவலர் புரவலன் நீயுமல்லை என வெறுத்து மொழிந்த போதும்(162) மனைவியைப் பிரிந்து மற்றொருத்தியை நயந்து வாழ்தல் சரியன்று எனக் கடிந்து கூறிய போதும்(143-147) மன்னர்கள் புலவர்களிடம் பகைமை கொள்ளவில்லை. மாறாக அவர்களின் நன்மொழிகளை ஏற்றிருக்கின்றனர்.

மன்னர்களின் நாளவையில் வாயிற் காவலர்களுக்குச் சொல்லாது செல்லும் உரிமை புலவர்களுக்கு இருந்தது (புறம்.54) என்பதன் மூலம் நாட்டில் புலவர்களுக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் புலப்படுகின்றது.

இதன்மூலம் பெரியோராகிய புரோகிதர் மன்னனுக்குப் போர்க்காலங்களிலும் மற்ற நேரங்களிலும் தன் நூலறிவு, பட்டறிவு ஆகியவற்றால் நல்வழி காட்டும் பணி புலனாகும்.

**தூதுவர்**

தொல்காப்பியர் பொருளதிகார அகத்திணையியலில் மூன்று வகையான பிரிவுகளைப் பற்றிப் பேசியுள்ளார். அஃதாவது அவர் குறிப்பிட்டுள்ள கருத்தின் அடிப்படையில், “கல்வி, பகை, தூது ஆகிய மூவகைப் பிரிவில் தூதிற்பிரிவும் ஒன்று. இவை உயர்ந்தோருக்கு உரியது” [7] என்பதாகும்.

தூது செல்பவர்கள் கடுமையான சொற்களை நீக்கி விட்டு இனிமையான சொற்களால் கேட்போர் மகிழும்படியாகப் பேசும் திறமையுடன் தூதுவரின் செயல்திறன், தூதுவர்க்கு இருக்க வேண்டிய பண்புகள் போன்றவற்றை வள்ளுவர் 70 முதல் 73 முடிய உள்ள அதிகாரங்களில் விளக்கியுள்ளார்.

பண்டை கால புலவர் பெருமக்களும் பார்ப்பனர்களும் தூது சென்றமையைப் புறநானூற்றுப் பாடல்கள் விளக்கி நிற்கின்றன. ஒரே குடியைச் சார்ந்த சோழன் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவரும் தம்முள் மாறுபட்டு போர் தொடுக்கக்கூடிய நிலையில் கோவூர்கிழார் (புறம்.44, 45) இருவரிடமும் தூதாக சென்று அவர்தம் குடிப்பெருமையை எடுத்துக்கூறி அவர்களைச் சந்து செய்விக்கிறார்.

அதியமான் நெடுமான் அஞ்சியின் சார்பாக ஔவையார் தொண்டைமானிடம் தூது (புறம். 95) சென்று போரைத் தடுத்து நிறுத்தியுள்ளார். தம் புதல்வரோடு போரிடுவதற்காக துணிந்து நின்ற கோப்பெருஞ்சோழனிடம் புல்லாற்றூர் எயிற்றியனார் (புறம்.213) தூது சென்று அவனை அமைதிப்படுத்துகிறார்.

அந்தணர்களாகிய பார்ப்பனர்களும் (புறம்.305) பாராளும் மன்னர்களிடம் தூது சென்று பகையைப் போக்கியுள்ளனர். மேற்குறித்த செய்திகள் போர்க்காலங்களில் தூதுவரின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துகின்றன.

**சாரணர் (ஒற்றர்)**

சாரணர் என்போர் ஒற்றர் என்றும் அழைக்கப்படுவர். ஒற்றர் என்பவர் பகைவர், சுற்றத்தார், நண்பர் என்னும் மூன்று திறத்தார் மாட்டும் நிகழ்ந்தன, நிகழப்போவன அனைத்தையும் அறிந்து அறிவிப்பவர் ஆவார்.

வள்ளுவர் ஒற்றாடல் (59) எனும் அதிகாரத்தில் ஒற்றனுக்குரிய இலக்கணம், ஒற்றனுக்குரிய ஆற்றல், ஒற்றனுக்கு மன்னன் சிறப்பு செய்யும் முறை ஆகியவற்றைத் தெளிவாகப் பேசியுள்ளார். ஒற்றர்கள் ஒற்று செல்மாக்கள் (அகம்.313:15) எனவும் குறிக்கப்படுகின்றனர்.

"சோழன் நலங்கிள்ளி உழைநின்று உறையூர் புகுந்த இளந்தத்தன் என்னும் புலவனைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி, 'ஒற்று வந்தான்' என்று கொல்லப் புக்குழி கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது" (புறம்.47) என வரும் புறநானூற்றுப் பாடல் குறிப்பு மேற்குறித்த மரபிற்குச் சான்றாகும்.

இவற்றால் போர்க்காலங்களில் ஒற்றர்களின் பணி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறியமுடிகின்றது.

**சேனாபதியர்**

சேனாபதியர் என்போர் படைத்தலைவர், சேனைத்தலைவர் எனவும் அழைக்கப்படுவர். இவர் யானை, குதிரை, தேர், காலாள் என்ற நால்வகைப் படைகளுக்கும் தலைமை வகிப்பவர். நாட்டின் பாதுகாப்பு மற்றும் போர்க்காலங்களில் நால்வகை படைகளையும் திறம்பட செயல்படுத்துவதில் தனித்திறம் படைத்தவர்.

முடிவாக தன் மதிநுட்பம் கொண்டு மன்னனுக்கு அறிவுறுத்துவது அமைச்சர் செயலாகும். தன் அனுபவ அறிவு கொண்டு மறம் போக்கி அறம் போற்ற மன்னனை வலியுறுத்துவது புரோகிதர் செயலாகும். பகைவரின் நிலையறிந்து அமைதிக்காக தாமே நேரடியாகச் சென்று இருவரையும் சந்து செய்விப்பது தூதுவரின் செயலாகும். பகைபுலம் பற்றிய மறைபொருளை அறிந்து மன்னனுக்கு அறிவிப்பது ஒற்றர்கள் செயலாகும்.

இவற்றால் ஐம்பெருங்குழு நாட்டின் உயர்குழு என்பதும், போர்க் கொள்கைகளை உருவாக்குவதில் அரசிற்குத் துணைநின்று பெரும்பங்கு வகித்தது என்பதும் புலப்படும்.

**எண்பேராயம்**

பண்டைக் காலத்தில் அறங்கூறும் அவையங்கள் இருந்துள்ளது. இவை எட்டுவகைச் சிறப்பை நுவலக் கூடியது என்பதைத் தொல்காப்பியர்,

"எட்டுவகை நுதலிய அவையத் தானும் " (தொல்.புறத்.1022:16)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதே போல புறநானூற்றில் பூதப்பாண்டியன் உரைக்கும் வஞ்சினமொழியாகிய, 'பகைவரை நான் வெற்றி பெறவில்லை என்றால் அறங்கூறும் அவையத்தில் திறனில்லாத ஒருவனை அமர்த்தி மெலிகோல் செய்த குற்றத்திற்கு உரியவன் ஆகுக' (புறம்.71:7-9) என்பதன் வழி அறிய முடிகின்றது. இதன் மூலம் தகுதி மிக்க சான்றோரை அறங்கூறும் அவையத்துப் பணியில் அமர்த்தினால் தன் செங்கோல் ஆட்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்ற எண்ணம் மன்னனுக்கு இருந்ததைப் புறநானூறு உணர்த்துகின்றது.

எண்பேராயம் என்பது தற்காலத்தில் உள்ள பாதுகாப்பு அமைச்சர் குழுவைப் போன்றது. இவ்வாயம் அரசு அலுவலர்களைத் தன்னகத்தே கொண்டது.

நாட்டின் பாதுகாப்பு பற்றிய கொள்கைகள், நெறிமுறைகள் ஆகியவற்றை ஐம்பெருங்குழுவுடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்திருந்தாலும், விரிவான, விளக்கமான கொள்கைகளைக் காலம், இடம், செயலுக்கு ஏற்ப எண்பேராயத்துடன் கலந்து ஆலோசித்த பின்பே அரசு முடிவு செய்தது எனலாம்.

| **வ.எண்.** | **எண்பேராயக் குழுவினர்** | **குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | கரணத்தியலவர்/அரசாங்கப் பெருங்கணக்கர் | நாட்டின் பாதுகாப்பு மற்றும் போருக்குத் தேவையானவற்றைக் கணக்கிட்டு உரைத்தல் |
| 2 | கருமவிதிகள்/அரசாங்க அலுவல் அதிகாரிகள் | நாட்டின் அமைதி மற்றும் போர்க்காலங்களில் அரசின் பணி தடையின்றி நடைபெறச் செய்தல் |
| 3 | கனகச்சுற்றம்/அரசாங்கப் பொருள்காப்பு அதிகாரிகள் | அரசின் பொருள்நிலை உரைத்தல் |
| 4 | கடைக்காப்பாளர்/நாட்டின் எல்லைக் காவல் அதிகாரிகள் | நாட்டின் எல்லைக் காவல் நிலையை அரசுக்கு உணர்த்தல் |
| 5 | நகர மாந்தர் | நாட்டு மக்களின் மனநிலையை அரசுக்கு எடுத்துரைத்தல் |
| 6 | யானைப் படைத்தலைவர் | யானைப் படையின் நிலையை அரசுக்கு உணர்த்தல் |
| 7 | காலாட் படைத்தலைவர் | காலாட் படையின் நிலையை அரசுக்கு உணர்த்தல் |
| 8 | இவுளி மறவர்ஃகுதிரைக் படைத்தலைவர் | குதிரைப் படையின் நிலையை அரசுக்கு உணர்த்தல் |

மேற்கண்டவற்றால் இக்காலப் படை அமைப்பு போன்று ஒவ்வொரு பிரிவிலும் எவ்வளவு பேர் இடம் பெற்றிருந்தனர் எனத் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், போர்ச் செயல்களுக்கு ஏற்ற படை அமைப்புகளை அக்காலப் படை அமைப்புகள் கொண்டிருந்தமையை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

நாம் எந்த காரியத்தைச் செய்தாலும் திட்டமிட்டுச் செய்யும்போது அவற்றில் வெற்றி நிச்சயம் கிடைக்கும். அத்தகைய உத்தி முறையைப் போரின் நுட்பங்களாக பண்டைத் தமிழர் பயன்படுத்தியுள்ளனர். இடம், காலம் அறிந்து, ஒற்று ஆராய்ந்து, போர்க்காலப் பணிக் குழுக்களாகிய ஐம்பெருங்குழு, எண்பேராயம் இவற்றின் ஆலோசனைப்படி போரினை நடத்தி உள்ளனர். சங்க காலத்தில் இக்குழுக்கள் இருந்தமையை இலக்கியங்களில் உள்ள சில சொற்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் அக்குழுக்களில் இருந்தவர்கள் பற்றியோ அவர்களின் பணிகள் பற்றியோ எந்தவித தகவலும் இடம் பெறவில்லை.

**அடிக்குறிப்புகள்**

1. சிலம்பு. 5: 157 – 160
2. உ.வே.சாமிநாதையர், சிலப்பதிகாரம் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், ப. 166.
3. அ.கி.பரந்தாமனார், வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும், ப. 101
4. திரிகடு., பாடல் எண், 61
5. மேலது., பாடல் எண் 33:2
6. குறள்., அதி., 45 முன்னுரை
7. தொல்.பொருள்., 27 – 28

**முதன்மை ஆதாரங்கள்**

1. தொல்காப்பியம் – பொருளதிகாரம்
2. சங்க இலக்கியங்கள் – எட்டுத்தொகை, பத்துப்பாட்டு
3. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
4. சிலப்பதிகாரம்

**துணைமை ஆதாரங்கள்**

1. உ.வே.சாமிநாதையர், சிலப்பதிகாரம் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும்
2. அ.கி.பரந்தாமனார், வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும்